**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness

Mcop 322/2023

ம.சா 2 மைக்கேல் ராஜ்

| | |
|---|---|
| Name | : மைக்கேல் ராஜ் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 27.02.2026 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் நீதிமன்றத்தில் அழைப்பாணை மூலம் ஆஜராகியுள்ளேன். நான் தற்போது திசையின்விளையில் வசித்து வருகிறேன். நான் சர்ச்சில் வேலை செய்கிறேன். நான் டிரைவராக உள்ளேன். கடந்த 5.7.2023 தேதியில் மதுரையில் இருந்து லோடு ஏற்றி கொண்டு சென்னைக்கு டி.என்.79.ஜே.4579 என்ற வாகனத்தில் சரக்குகளை ஏற்றி கொண்டு சென்று கொண்டிருந்தேன். லஞ்சமேடு என்ற இடத்தில் மதுரை முதல் திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் எனக்கு தூக்கம் வந்ததால் வாகனத்தை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திவிட்டு ஓய்வு எடுத்து கொண்டிருந்தேன். அப்போது காலை 6 மணியளவில் ரெட்டாக்ஸி ஒன்று பின்னால் வந்து மோதி விபத்து ஏற்படுத்தி விட்டது. அவ்வாறு என் வாகனத்திற்கு மீது மோதுவதற்கு முன்னர் செண்டர்மீடியவில் வேகமாக வந்து இடித்து என் வாகனம் மீது மோதியது. எனது வாகனம் முன்னால் 15 அடி தள்ளி சென்றுவிட்டது. நான் வாகனத்தை கட்டுபடுத்தி நிறுத்திவிட்டேன். அப்போது அந்த காரில் வந்த நபர்களை விசாரித்தபோது அதிவேகமாக வந்து செண்டர்மீடியாவில் இடித்து பஸ்ஸ்டாப்பின் மீது இடித்து எனது வாகனத்தின் மீது இடித்துவிட்டதாக சொன்னார்கள்.

விபத்திற்கு நான் காரணம் இல்லை. சரியான இடத்தில் தான் வாகனத்தை நிறுத்திஇருந்தேன். விபத்திற்கு காரை ஒட்டி வந்த நபர் தான் காரணம்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என்கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், நான் நஷ்டஈடு வழங்குவதில் இருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.